
விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 2 ஞாயிறு 18.07.2021 மலர் - 2, இதழ் - 102

# தேங்காய் சுடுதல் திருவிழா



தட்சிணாயனப் புண்ணிய காலம் ஆரம்பம். கரூர், சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் வருடந்தோறும் ஆடி மாதம் முதல் நாளன்று, தேங்காய் சுடும் பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம். இந்த பண்டிகை கொண்டாடப்படும் நிகழ்ச்சி மகாபாரதக் கதையுடன் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது. அதர்மத்துக்கும், தர்மத்துக்கும் இடையிலான மகாபாரத யுத்தம், ஆடி மாதம் முதல் தேதி தொடங்கி 18 நாட்கள் நடைபெற்றது. ஆடி 18ல் முடிவுக்கு வந்தது. இந்த போரில் தர்மம் வெல்ல வேண்டும் என்று யுத்தம் தொடங்கும் நாளான ஆடி முதல் நாள், மக்கள் அனைவரும் வேண்டி அதற்காக விநாயகர் மற்றும் அவரவர் இஷ்ட தெய்வங்களுக்கு பூஜை செய்கிறார்கள். இந்த பூஜையின்போது படைக்கும் வகையில் இதுபோல் தேங்காய் சுட்டு அதனை பிரசாதமாக படைத்து வழிபட்டதாக ஒரு ஐதீகம் உள்ளது.

ஆண்டாண்டு காலமாக அந்த ஐதீகத்தைக் கடைபிடிக்கும் வகையில் இந்த மாவட்டங்களில் ஆடி மாதப் பிறப்பன்று தேங்காய் சுடும் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று தேங்காய் சுடும் பண்டிகை சிறுவர், சிறுமிகளின் உற்சாகத்துடன் வீடுகள் தோறும் கொண்டாடப்பட்டது. புதிய தேங்காயை எடுத்து அதன் மேல் உள்ள நாரினை அகற்றிவிட்டு ஓடு மெலிதாகும் அளவுக்கு அதை தரையில் தேய்ப்பார்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தேய்க்கப்பட்டதும், அதன் ஒரு கண்ணில் துளையிட்டு உள்ளே இருந்த தேங்காய் தண்ணீர் வெளியேற்றப்படும். பின்னர் துளையிட்ட கண்ணின் வழியாக தேங்காய் உள்ளே பச்சரிசி, பருப்பு, வெல்லம், அவல், எள், ஏலக்காய் போன்றவை தேங்காய் நீருடன் கலந்து இடப்படும். நீண்ட ஒரு முனை கூராக சீவப்பட்ட அழிஞ்சில் மரக் குச்சியில்

விஜயபாரதம்



அந்த தேங்காயை சொருகி, அந்த குச்சியை சுற்றி மஞ்சளை பூசி துளையை மூடுவர். பின், வீட்டு வாசலில் ஒரு இடத்தில் நெருப்பு மூட்டி,அந்த நெருப்பில் குச்சியில் சொருகப்பட்ட தேங்காயை காட்டி சுடுவர். ஒரு குறிப்பிட்ட பக்குவத்தில் தேங்காய் சுடப்பட்டபின் அதை அருகில் உள்ள பிள்ளையார் கோயில்களுக்கு எடுத்துச்சென்று வழிபட்ட பின்னர், தேங்காயை வீட்டிற்கு எடுத்துவந்து, அதை உடைத்து உள்ளே இருந்த கலவை உணவை உற்றார், உறவினர்களுடன் உண்டு மகிழ்வது அலாதி சுகம். சிலர் வீட்டில் உள்ள சாமி படங்களுக்கு முன்பு படைத்து, பூஜைகள் செய்துவிட்டு சாப்பிடுவார்கள். இப்படி நெருப்பில் பக்குவப்பட்ட தேங்காயும் அதனுள்ளே இருக்கும் பூரணமும் மிகவும் சுவையாக இருக்கும். ருசி பார்த்தவர்கள் இதனை உணர்வார்கள்.

விஜயபாரதம்

## சென்னை ஐ.ஐ.டி. தேர்வு


விஜயபாரதம்

அமெரிக்காவில் உள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், வேகமான பயண தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்காக, ஹைப்பர் லூப் எனும் போட்டியினை நடத்துகிறது. பாரதம் சார்பில் சென்னை ஐஐடி மாணவர்கள் இதில் பங்கேற்கின்றனர். முதலில் இந்நிறுவனம் ஹைப்பர் லூப் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு உலகளவில் போட்டிகளை நடத்தியது. இந்த போட்டியில் சென்னை ஐஐடி மாணவர்கள் குழு தகுதி பெற்றது.

## தன்னார்வ மாணவர்கள்


விஜயபாரதம்

புதுச்சேரியில் கரோனாவைக் கட்டுப்படுத்துவதில் அரசுடன் இணைந்து பணியாற்றிய தன்னார்வலர்களின் பங்களிப்பை பாராட்டும் விதமாக அன்னை தெரசா பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குறிப்பாக, துணை மருத்துவக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் 119 பேருக்குத் தலா ரூ.10,000 வீதம் சிறப்பூதியத்தை அம்மாநில துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் வழங்கினார். பின்னர் பேசிய அவர், 'இளைஞர்களின் ஒத்துழைப்பு கரோனா முன்னணிப் பணியாளர்களுக்கு அதிக பலத்தைக் கொடுத்தது. இக்கட்டான சூழ்நிலையை சிறப்பாகக் கையாளத் துணை நின்றனர். இந்த சூழ்நிலையைக் கையாளுவதில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் அனைத்திலும் வெற்றி பெற வாழ்த்துகள். கரோனா களப் பணி உங்களை அனுபவசாலிகளாக மாற்றி இருக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள நட்பு, உறவு, பண்பாடு ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கான சூழலைத் தந்திருக்கிறது. இளைஞர்கள் அனைவரும் சேவை மனப்பான்மைபோடு பணியாற்ற வேண்டும்' என்று அவர்களை பாராட்டினார்.

# கோயில் நிலத்தில் வாகனம் நிறுத்த கட்டணம்



விஜயபாரதம்

திருவாரூர் மாவட்டம், திருப்பாம்புரத்தில் உள்ள சேஷபுரீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தில், வாகனங்கள் நிறுத்துவதற்கு, கிராம பஞ்சாயத்து தலைவர் கட்டணம் வசூலிக்கிறார். இதனை தடுக்க வேண்டும் என, சென்னை உயர் நீதிமன்றத்தில், வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதிகள், அறநிலையத் துறையின் கீழ், இந்தக் கோயில் வருகிறது. எனவே அறநிலையத் துறை மட்டுமே கோயில் சொத்துக்களை கையாள முடியும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வாகனங்கள் நிறுத்துவதற்கு பஞ்சாயத்து தலைவர் கட்டணம் வசூலிப்பதற்கு தடை விதிக்கப்படுகிறது. இதுவரை வசூலித்த தொகைக்கான கணக்கை ரசீதுடன் தாக்கல் செய்ய வேண்டும். வசூலித்த தொகையையும் அறநிலையத்துறையின் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

# மூன்றாவது அலை பிரதமர் எச்சரிக்கை



விஜயபாரதம்

கொரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்பாக தமிழகம் கேரளா ஆந்திரா கர்நாடகா மஹாராஷ்டிரா ஒடிசா மாநிலங்களின் முதல்வர்களுடன் வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக பிரதமர் கலந்துரையாடினார். அப்போது பிரதமர், கொரோனா மூன்றாவது அலை ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கைகள் வருகின்றன. இந்த ஆறு மாநிலங்களில் கடந்த ஒரு வாரத்தில் 80 சதவீத தொற்று உறுதியாகியுள்ளது. நாட்டின் உயிரிழப்புகளில் 84 சதவீதம் இந்த ஆறு மாநிலங்களில் நிகழ்ந்துள்ளன. கேரளா மஹாராஷ்டிராவில் நிலைமை மிக மோசம். மூன்றாவது அலையை தவிர்க்க இப்போதே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாடுகளில் தொற்று அதிகரிக்க துவங்கியுள்ளது. இது நமக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை. கொரோனா அவசரகால நிதியாக 23 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கி உள்ளது. 332 ஆக்சிஜன் ஆலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், 53 ஆக்சிஜன் ஆலைகள் மட்டுமே மாநில அரசுகள் நிறுவியுள்ளன. புதிய அவசர சிகிச்சை பிரிவு, படுக்கைகள், பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். அதற்கு தேவையான நிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

# மாபெரும் தடுப்பூசி கொள்முதல்




விஜயபாரதம்

அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி எனும் திட்டத்தை செயல்படுத்தி வரும் நம் மத்திய அரசு, வரும் டிசம்பர் மாதத்திற்குள் 94.4 கோடி மக்களுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக தற்போது, 66 கோடி கொரோனா தடுப்பூசிகளை வாங்க ஒரே நாளில் மிகப்பெரிய ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ளது. இதன்படி, கூடுதல் 37.5 கோடி டோஸ் கோவிஷீல்டுக்கும், 28.5 கோடி டோஸ் கோவாக்சினுக்கும் ஒப்பந்தத்தை போட்டுள்ளது, மேலும் 30 கோடி டோஸ் பயோலாஜிக்கல்இ நிறுவனத்தின் 'கோர்பேவாக்ஸ்' தடுப்பூசியை வாங்க முன்பதிவு செய்து முன்கூட்டியே பணமும் செலுத்தியுள்ளது நம் மத்திய அரசு. இது, இதுவரை அரசால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய தடுப்பூசி கொள்முதல் என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தவிர, ரஷ்யாவின் ஸ்புட்னிக் – வியை சீரம் நிறுவனம், அப்பல்லோ லெபாரட்டரீஸ் உள்ளிட்டவை பாரதத்திலேயே தயாரிக்கின்றன.

# மின்சார முறைகேட்டில் தி.மு.க. பிரமுகர்

கோவை சுகுணாபுரத்தை சேர்ந்தவர் தி.மு.க பகுதி கழக செயலாளராக உள்ளவர் மு. ராஜேந்திரன். உணவு பொருள் வினியோகஸ்தரான இவர், அந்த பொருட்களை இருப்பு வைக்க வாடகைக்கு குடோன் எடுத்து பயன்படுத்தி வருகிறார். இந்த குடோனுக்கு அவர் முறைகேடாக மின்சாரத்தை திருடி பயன்படுத்தி வருவதாக தகவல்கள் வந்தன. இதனை அடுத்து மின்வாரிய விஜிலென்ஸ் அதிகாரிகள் ராஜேந்திரனின் குடோனில் சோதனை நடத்தினர். சோதனையில் மின்சாரத் திருட்டு உறுதிபடுத்தப்பட்டது. முறைகேட்டில் ஈடுபட்ட ராஜேந்திரனுக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தனர் அதிகாரிகள். ஆனால், ஆளும் கட்சியான தி.மு. கவின் பிரமுகர் என்ற அதிகார தோரணையில், அவ்வளவு தொகையெல்லாம் கட்டமுடியாது என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார் ராஜேந்திரன். இதனால் 15 ஆயிரத்து 500 ரூபாயை மட்டுமே அபராதமாக விதித்துள்ளனர். ஆனாலும் அளும்கட்சி என்ற அதிகாரத்தை பயன்படுத்தி ரூ. 12 ஆயிரம் மட்டுமே அபராதமாக அவர் செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. திமுக பிரமுகரின் இந்த அடாவடி போக்கு, கோவையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



விஜயபாரதம்

# கோயில் நிலம் தாரைவார்ப்பு



விஜயபாரதம்

சமஜ்வ வடபழனி கோயில் நிலத்தில் ஹிந்து சமய அறநிலையத்துறை சார்பில் சுற்று சுவர் அமைக்கப்பட்டபோது, அங்கு உள்ள மசூதிக்கு செல்ல தங்களுக்கு 20×80 அடி பாதை வேண்டும் என்று கேட்டு வற்புறுத்தியுள்ளனர் அப்பகுதி முஸ்லிம்கள். ஹிந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து, முஸ்லிம்கள், விருகம்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏவான பிரபாகர் ராஜாவுக்கு தகவல் சொல்லி வரவழைத்தனர். அவர்மூலம் அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இதற்கான அதிகாரம் தங்களுக்கு இல்லை என அதிகாரிகள் கூறியுள்ளனர். இதனை எம்.எல்.ஏவும் முஸ்லிம்களும் ஏற்கவில்லை, மேலும் மசூதி ஒலி பெருக்கி மூலம் செய்தி சொல்லி 200க்கும் மேற்பட்ட முஸ்லிம்களை அந்த இடத்துக்கு வரவழைத்து அதிகாரிகள் அச்சுறுத்தப்பட்டனர். அந்த சமயத்தில், விருகை தொகுதி எம்.எல்.ஏ பிரபாகர் ராஜா, ஹிந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர், அமைச்சர் ஆகியோரிடம் பேசி இதற்கு ஒப்புதலும் பெற்றுள்ளார். இதனையடுத்து மசூதிக்கு வழி விட்டு சுற்று சுவர் அமைக்கப்பட்டது.

இது குறித்து கருத்து தெரிவித்த ஹிந்து முன்னணியினர், 'தி.மு.க ஆட்சியில், ஹிந்துக்களின் நூற்றாண்டு கால ஆலயங்கள் இடிக்கப்படுகிறது. கோயில் சொத்தை கொடுக்க சொல்லி தி.மு.க எம்.எல்.ஏ, ஹிந்து சமய அறநிலையத்துறை அதிகாரியை கட்டாயபடுத்துகிறார். கோயில் நிலங்கள் அனைத்தும் மீட்கப்படும் என வீராப்பாகக் கூறிய தி.மு.க அமைச்சர்சேகர்பாபு,கோயில்நிலத்தைவிட்டுக்கொடுக்கிறார். முஸ்லிம்கள் என்றவுடன் அரசு அதிகாரிகளை கூட்டம் சேர்ந்து முஸ்லிம்கள் அச்சமூட்டுகின்றனர். ஆனால் வழக்கு இல்லை, கைது இல்லை. ஹிந்துக்கள் தங்கள் அடிப்படை உரிமைக்காக போராடினாலே கைது நடவடிக்கைகள் எடுக்கும் அரசும் காவல்துறையும், முஸ்லிம்கள் என்றால் மட்டும் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. கோயில் இடத்தை விட்டுக் கொடுத்ததற்கு இந்து முன்னணி கண்டனம் தெரிவிக்கிறது. மேலும், விட்டுக்கொடுக்கப்பட்ட இடத்தையும் சேர்த்து தடுப்பு சுவர் அமைக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் மாபெரும் போராட்டம் நடத்தப்படும்' என்று தெரிவித்துள்ளனர்.

# வேகமெடுக்கும் பாரத பொருளாதாரம்



விஜயபாரதம்

டான் & பிராட் ஸ்டிரீட் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் காணொளி மூலம் கலந்துக் கொண்டு உரையாற்றிய மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன், 'கொரோனா தொற்றுக்கு எதிராக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கொரோனா 2வது அலை நமது பொருளாதாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தடுப்பூசி திட்டம் விரைவுப்படுத்தப்பட்டு உள்ளது. அரசின் பல்வேறு சீர்திருத்த முயற்சிகள், தடுப்பூசி திட்டம் போன்றவை ஒருங்கிணைந்த பொருளாதாரத்தில் நல்ல பலனை கொடுக்கும். இதன் பலனாக, வரும் 2022 23 நிதியாண்டில், நமது நாட்டின் பொருளாதாரம் வேகமெடுக்கத் தொடங்கும். அது 6.5 முதல் 7 சதவீதம்வரை இருக்கும்' என தெரிவித்தார்.

# கோயில் நிலங்கள் மீட்பு



விஜயபாரதம்

திருப்பூரில் உள்ள ஏரகாம்பட்டி கிராமத்தில் நாகேஸ்வரசுவாமி கோயிலுக்குச் சொந்தமான ரூ. 1.50 கோடி மதிப்புள்ள 15 ஏக்கர் நிலத்தை மூன்று பேர் ஆக்கிரமித்திருந்தனர். இதைத்தவிர, இதே கோயிலுக்குச் சொந்தமான ரூ. 78 லட்சம் மதிப்புள்ள 12 ஏக்கர் நிலத்தை 4 பேர் ஆக்கிரமித்திருந்தனர். பொன்னாபுரம் கிராமத்தில் காசிவிஸ்வநாதர் மற்றும் வரதராஜ பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான 5 ஏக்கர் 47 செண்ட் நிலத்தை ஒருவர் ஆக்கிரமித்திருந்தார். ஹிந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள், வருவாய்துறையினரின் ஒத்துழைப்புடன் இந்த நிலங்களை மீட்டனர். இந்த இடங்களில் கோயிலுக்குச் சொந்தமான இடம் என்ற அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டது.

# அதிர்ச்சியில் காங்கிரஸ்



விஜயபாரதம்

பஞ்சாபில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக நவ்ஜோத்சிங் சித்துவை நியமிக்க காங்கிரஸ் தலைமை எடுத்த முடிவுக்கு அம்மாநில முதல்வர் அம்ரிந்தர் சிங், கடும் எதிர்ப்பு தெரிவித்து சோனியா காந்திக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், கட்சித் தலைமை தம் மீது விரும்பத்தகாத முடிவுகளைத் திணிக்கிறது. அடுத்த ஆண்டு பஞ்சாப்பில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள சூழலில் சித்துவை மாநில காங்கிரஸ் தலைவராக நியமனம் செய்வது, தேர்தல் முடிவுகளை பாதிக்கக்கூடும் என்று குறிப்பிட்டு உள்ளார். பஞ்சாப் முதல்வரின் கடிதம் அக்கட்சியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# முதல்வரின் மகள்களுக்கு திருமணம்


விஜயபாரதம்

மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சௌஹானும் அவரது மனைவியும், கடந்த 1998ல் சுந்தர் சேவா ஆசிரமத்தில் வளர்க்கப்பட்ட ஏழு சிறுமிகளையும் இரண்டு சிறுவர்களையும் தத்தெடுத்தனர். அன்றில் இருந்து அவர்களின் கல்வி உட்பட அனைத்து செலவுகளையும் சௌஹான் குடும்பம் கவனித்து வருகிறது. அவர்களில் இதுவரை நான்கு பெண்கள் மற்றும் ஒரு பையனுக்கு திருமணம் செய்துக் கொடுத்துவிட்டார். தற்போது மீதமுள்ள ராதன், சுமன், பிரிதி அகிய மூன்று மகள்களுக்கும் விதிஷாவில் உள்ள புகழ்பெற்ற பாத்வாலே கணேஷ் கோயிலில் அனைத்து சம்பிரதாயங்கள், சடங்குகளுடன் கொரோனா வழிகாட்டுதலுக்கு இணங்க எளிய முறையில் திருமணம் செய்து கொடுத்தார். 'இன்று எனது மூன்று மகள்களும் மகிழ்ச்சியான எதிர்காலத்தில் அடியெடுத்து வைக்கிறார்கள், இது தந்தையாக எனக்கு புனிதமான நாள். ஒரு பெரிய பொறுப்பு இன்று நிறைவேற்றப்பட்டது. என் மகள்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கட்டும்' என அவர்களை ஆசீர்வதித்தார் முதல்வர் சௌஹான்.

# தலிபானை காட்டிக்கொடுக்காத என்.டி.டி.வி

ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் சுட்டுக் கொல்லப்பட்ட ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் புகைப்பட பத்திரிகையாளர் டேனிஷ் சித்திகிக்கு இரங்கலைத் தெரிவித்த என்.டி.டி.வி செய்தி தொகுப்பாளர் ரவீஷ் குமார், அவரை தியாகி என புகழ்ந்ததோடு, அவரை கொன்ற தோட்டாக்களைச் சுட்ட துப்பாக்கிக்கு நான் ஆயிரக்கணக்கான சாபங்களை விடுகிறேன் என்று கூறினார். மேலும், ஆப்கானிஸ்தானில் இரு தரப்பினருக்கும் இடையிலான மோதலில் டேனிஷ் கொல்லப்பட்டார் என கூறினாரே தவிர, தலிபான் பயங்கரவாதிகளால்தான் அவர் கொல்லப்பட்டார் என கடைசிவரை கூற மறந்துவிட்டார். என்.டி.டிவி மட்டுமல்ல, இந்த கொலைக்கு பெரும்பாலான ஊடகங்கள், தலிபான் பயங்கரவாதக் குழுவை நோக்கி விரல் நீட்ட முயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விஜயபாரதம்



# உணவு தானிய ஏ.டி.எம்



விஜயபாரதம்

நியாய விலை கடைகளில் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருப்பதைத் தவிர்க்கவும், சரியான அளவில் உணவு தானியங்கள் வழங்கவும் தானியங்கி இயந்திரம் மூலம் உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்தை ஹரியானா அரசு முன்னெடுத்துள்ளது. இந்த திட்டம் ஐ.நா சபையின் 'உலகளாவிய உணவு திட்டத்தின்' கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்ட சோதனை முயற்சியாக குருகிராமில் உள்ள ஃபாருக்நகர் நியாய விலைக் கடையில் 'அன்னபூர்த்தி' என்ற தானியங்கி உணவு தானிய ஏ.டி.எம் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்த உணவு தானிய இந்த ஏ.டி.எம் இயந்திரம் 7 நிமிடங்களில் 70 கிலோ வரையிலான தானியங்களை வழங்கும். வங்கி ஏடிஎம் முறையிலேயே செயல்படும். தானிய அளவுகளில் குளறுபடிகள் ஏற்படாது. தொடுதிரை, கைரேகை பதிவு வசதி இருப்பதால், பயனாளிகள் ஸ்மார்ட் கார்டு, ஆதார் எண் பதிவு மூலமாகவோ இந்த இயந்திரத்தில் உணவு தானியங்களைப் பெற முடியும்.

# கன்வர் யாத்திரை இல்லை பக்ரீத் உண்டு



விஜயபாரதம்

உத்தரகண்டில் வருடந்தோறும் விஷேஷமாக கொண்டாடப்படும் கன்வர் யாத்திரைக்கு, கொரோனா தொற்று பரவிவிடும் என்ற அச்சம் காரணமாக இவ்வருடம் அனுமதியை மறுத்துள்ளது அம்மாநில அரசு. ஆனால், அங்கு தினசரி கொரோனா தொற்று 48 என்ற அளவிலேயே உள்ளது. ஆனால், தினசரி நமது நாட்டின் கொரோனா பாதிப்பில் ஏறத்தாழ 30 சதவீதம் என்ற அளவுக்கு விபரீத பங்களிப்பு அளிக்கும் சிறிய மாநிலமான கேரளாவில் பக்ரீத்தை ஒட்டி, கொரோனா பொதுமுடக்கம் தளர்த்தப்பட்டுள்ளது. கேரளாவில் தினசரி பாதிப்பு சுமார் 13,000 என்ற எண்ணிக்கையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அங்கு ஜிகா வைரஸ் தொற்றும் பரவி வருகிறது. எனவே இந்த தளர்வுகளால் அங்கு கொரோனா தொற்றும் ஜிகா வைரஸ் பாதிப்பும் அதிகமாகலாம் என மருத்துவ வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சபரிமலை, ஆற்றுக்கால் பகவதி அம்மன் திருவிழா, குருத்தோலை ஞாயிறு, புனித வெள்ளி என எதற்கும் தளர்வு அளிக்காத கேரளாவை ஆளும் கம்யூனிச அரசு, முஸ்லிம்களை திருப்திபடுத்த இந்த தளர்வுகளை அறிவித்திருப்பதற்கு ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# பி.எஸ். எப் பாரதத்துக்கு பெருமை


விஜயபாரதம்

பி.எஸ்.எப் எனப்படும் எல்லை பாதுகாப்புப் படையின் 18வது துவக்க விழாவில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமீத் ஷா, ‘உலக வரைபடத்தில் பாரதத்தின் இருப்பிற்கு காரனமான பி.எஸ்.எப், துணை ராணுவப் படைகள் காரணமாக பாரதம் பெருமை கொள்கிறது. இவர்களால், உலக வரைபடத்தில் பாரதம் தனது நிலையை வலுப்படுத்துகிறது. இந்த துணிச்சலான இதயங்களையும் வீரர்களையும் மறக்க முடியாது. முந்தைய கிழக்கு பாகிஸ்தானில், மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன. பெண்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். அந்த நேரத்தில் அவர்களைக் காக்க, பிஎஸ்எப் துருப்புக்கள் முக்கிய பங்காற்றின. அவர்களால் இப்போது, வங்கதேசம் ஒரு சுதந்திர நாடாக உள்ளது’ என கூறினார். இவ்விழாவில் வீரதீரச் செயல் புரிந்த 27 பி.எஸ்.எப் வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

# குறை எந்த பக்கம்


விஜயபாரதம்

புதிதாக கல்யாணமான ஒரு கணவனும் மனைவியும் புதிய ஒரு நகரத்தில் குடியேறினார்கள். அடுத்த நாள் காலையில் இருவரும் வீட்டின் ஹாலில் அமர்ந்து காபி குடிக்கும் போது, பக்கத்துக்கு வீட்டு பெண் துணிகளை துவைத்து காயப்போட்டுக்கொண்டிருப்பது ஜன்னல் வழியாக தெரிந்தது. அதை பார்த்த மனைவி கணவனிடம் ‘அங்க பாருங்க, அந்த பொண்ணுக்கு துவைக்கவே தெரியல. துணியெல்லாம் கருப்பு புள்ளிகளா இருக்கு’ அப்படின்னு சொன்னா.

ஜன்னல் வழியே பார்த்த கணவன் ஒண்ணுமே சொல்லல. பக்கத்துக்கு வீட்டு பொண்ணு தொவைச்சு காய போடறதும் அத ஜன்னல் வழியா பாத்து மனைவி துவைக்க தெரியலன்னு சொல்றதும், கணவன் அதுக்கு ஒண்ணுமே சொல்லாம இருக்குறதும் ரொம்ப நாளா நடந்துச்சு.

திடீர்னு ஒரு நாள் மனைவி ரொம்ப ஆச்சரியமா சொன்னா: இங்க பாருங்க! கடைசியில நம்ம பக்கத்து வீட்டு பொண்ணு துணி துவைக்க படிச்சுட்டா. இன்னைக்கு துணிகளை சுத்தமா துவைச்சி இருக்கா. அதுக்கு அந்த கணவன், ’அது வேற ஒன்னும் இல்ல. இன்னைக்கு காலையில சீக்கிரமா எழுந்து நம்ம வீடு ஜன்னல் கண்ணாடிகளை எல்லாம் நான் துடைச்சேன்’ அப்படின்னு சொல்லிட்டு காபி குடிக்க ஆரம்பிச்சான்.

அடுத்தவனோட குறைகளா நாம நெனைக்கிறது சில நேரங்களில் நம்மளோட பார்வை பிரச்சினையா கூட இருக்கலாம்.

# வலையில் சிக்கிய மீம்கள்







